1975 அக்டோபர் 23]

சொல்லவேண்டுமாளுல் புகுமுக வகுப்பிற்குப் பல்வேறு இடங்களிலே இடங்கள் இன்னும் காலியாக இருக்கின்றன. சென்னே, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி போன்ற இடங்களில் புகழ்பெற்ற சில குறிப்பிட்ட கல்லூரிகளில் வேண்டுமாளுல்—அப்படிப்பட்ட கல்லூரிகளிலேதான் சேரவேண்டுமென்று பலர் நினேக்கின்ற காரணத்தால்—இருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோன்ற குற்றச்சாட்டு அப்படிப்பட்ட கல்லூரிகளேத் தவிர வேறு பல கல்லூரிகளிலே இல்லே என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளி சேமிப்பு வங்கித் திட்டம்

***4 வினு—திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பள்ளி சேமிப்பு வங்கித் திட்டம் ஏதேனும் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனேயில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பள்ளி சேமிப்பு வங்கித் திட்டம் 1972-73-ல் அமுலாக்கப்பட்டுள்ளது.

திரு. வை. பாலசுந்தரம்: தலேவர் அவர்களே, இது ஒரு சிறந்த திட்டமாகையால் மாணவர்களிடையே ஆரம்பத்திலிருந்து இப்படிப்பட்ட சிக்கன சேமிப்புத் திட்டத்தைப் பயன்படுத்தக் கூடிய முறையைக் கொண்டுவந்தால் நாட்டிற்கு நல்லதல்லவா? ஆகவே இதை ஒரு மாரல் பாடமாக அமைத்து ஆரம்ப காலத்திலிருந்து போதிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலேவா அவர்களே, 1972-73 ஆம் ஆண்டிலிருந்து இந்தத் திட்டம் தமிழகத்தில் உள்ள கல்லூரிகளிலே கொண்டுவரப்பட்டது. பள்ளி சேமிப்பு வங்கித் திட்டத்தை அமல்படுத்திக்கொண்டு வருகிருேம். அதை மேலும் ஊக்குவிப்பதற்கான எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தத் திட்டத்தினுடைய முக்கிய நோக்கம் மாணவர்கள் வங்கிகளோடு தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் சேமிப்பு மனப்பான்மையைப் பெறவேண்டுமென்றும் கொண்டுவரப்பட்டது. இதற்காக மத்திய அரசு உதவி செய்கிறது. அந்த உதவிகளேப்பெற்று நாம் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்திவருகிருேம். மேலும் இந்தத் திட்டத்தை ஊக்குவிப்

பதற்காக நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களிலே 8,919 மாணவர்கள் இதிலே ஈடுபட்டு இருக்கிறார்கள், சுமார் 37,284 ரூபாய் சேர்க்கப் பட்டிருக்கிறது. கோயம்புத்தூரில் 8,303 மாணவர்கள் சேர்ந்திருக் கிறார்கள், சுமார் ரூ. 1,10,716 சேர்க்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலேயும் குறிப்பிட்ட அளவிற்கு இருக்கிறது. மொத்த எண்ணிக்கையைக் கணக்கிட்டால் குறைந்த அளவிற்குத்தான் இருக்கும். இதையெல்லாம் பெருக்குகின்ற முயற்சியில் அரசு ஈடுபட்டு இருக்கிறது.

இரணியலில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி

*5 **வினா—திரு. ஏ. பாலையா :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், இரணியலில் பெண்களுக்கு என தனியாக அரசு உயர்நிலைப்பள்ளி ஒன்று நிறுவும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. ஏ. பாலையா : தலைவர் அவர்களே, இரணியலில் அரசு உயர் நிலைப்பள்ளி இருக்கிறது. அங்கே இரண்டாயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் பயின்று வருகிறார்கள். அதிலே பெரும்பாலும் பெண்கள் படித்து வருகிறார்கள். ஆனால் இந்தப் பள்ளியிலே போதுமான இடவசதியில்லாத காரணத்தால் ஏராளமான மாணவர்கள் வெளியிடங்களுக்குச் செல்லவேண்டிய நிலைமையிருக்கிறது. அதைக் கருத்தில் கொண்டு இரணியலில் பெண்களுக்கு என்று தனியாக ஒரு உயர்நிலைப்பள்ளியைத் தொடங்க அரசு அனுமதியளிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இரணியலில் அரசினர் உயர்நிலைப்பள்ளியொன்று ஏற்கெனவே இருக்கிறது. அதிலே ஆறு முதல் 11 வகுப்புகள் வரையிலும் இருக்கின்றன. அதிலே 1.066 மாணவர்கள் படித்து வருகிறார்கள். மாணவியர்கள் 657 பேர்கள் படித்து வருகிறார்கள். ஆகவே, தனியாக பெண்கள் உயர்நிலைப்பள்ளி வைக்க எண்ணிக்கை போதுமா என்றால் போதும். பக்கத்திலே 3-வது மைலிலே எல்.எம்.எஸ். உதவிபெறும் பள்ளி ஒன்று இருக்கிறது, அதிலே